# மாதிரி வினாத்தாள் 2019 – 2020 - IV

## பத்தாம் வகுப்பு

## மொழிப்பாடம் : தமிழ்

நேரம் : 15 நிமிடம் + 3.00 மணி　　　　மதிப்பெண்கள் : 100

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 x 1 = 15

1. விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக.

பச்சரிசியைக் கொண்டு ……………… செய்து பாசிப்பருப்பினை வறுத்து ……… பிடித்து கேரட்டைத் துருவி நெய்மிட்டு …………… செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக்கிழங்கைச் சீவி ………… செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.

அ. பொங்கல், உருண்டை, சீவல், அல்வா　　ஆ. சீவல், உருண்டை, அல்வா, சீவல்

இ. பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்　　ஈ. உருண்டை, சீவல், அல்வா, பொங்கல்

2. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ. உழவு, மண், ஏர், மாடு　　ஆ. மண், மாடு, ஏர், உழவு

இ. ஏர், உழவு, மாடு, மண்　　ஈ. உழவு, ஏர், மண், மாடு

3. பாரதியார் காற்றை 'மயலுறுத்து' அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர் –

அ. மணம் வீசும் காற்றாய் நீ வா　　ஆ. மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா

இ. மயிலாடும் காற்றாய் நீ வா　　ஈ. மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

4. மேன்மை தரும் அறம் என்பது ……………

அ. கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

ஆ. மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ. புகழ் கருதி அறம் செய்வது

ஈ. பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

5. இலையுதிர்காலம் ……………… சருகாயின!

மழைக்காலம் …………… தழைத்தன!

சருகுகளோ செழுமையான உரங்களாயின!

– புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக.

அ. மரங்களெல்லாம், கிளைபரப்பின　　ஆ. காடெல்லாம், வளர்ந்தன

இ. இலைகளெல்லாம், மரங்களெல்லாம்　　ஈ. மலையெல்லாம், முளைத்தன

6. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?



அ. நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்　　ஆ. ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ. அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்　　ஈ. அங்கு வறுமை இல்லாததால்

7. பின்வருவனவற்றுள் முறையான தொடர்

அ. தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

ஆ. தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு

இ. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு

ஈ. தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

8. கருப்பொருளுக்கேற்ற உரிப்பொருளைப் பொருத்துக.

அ. குறிஞ்சி – 1. உப்பு விளைவித்தல்

ஆ. முல்லை – 2. நெல்லரிதல்

இ. மருதம் – 3. நிரைமேய்த்தல்

ஈ. நெய்தல் – 4. தேனெடுத்தல்

அ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1　　ஆ) அ – 3, ஆ – 2, இ – 4, ஈ – 1

இ) அ – 1, ஆ – 3, இ – 2, ஈ – 4　　ஈ) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 3

9. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.

பூனையார் பால்சோற்றைக் கண்டதும் விரைந்து வருகிறார்.

– ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதிகள் முறையே –

அ. மரபு வழுவமைதி, திணை வழுவமைதி

ஆ. இட வழுவமைதி, மரபு வழுவமைதி

இ. பால் வழுவமைதி, திணை வழுவமைதி

ஈ. காலவழுவமைதி, இட வழுவமைதி

10. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை –

அ. குலை வகை　　ஆ. மணி வகை

இ. கொழுந்து வகை　　ஈ. இலை வகை

11. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி.

அ. உவமை　　ஆ. தற்குறிப்பேற்றம்

இ. தீவகம்　　ஈ. உருவகம்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடைதருக.**

"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று."

12. பாடல் இடம்பெற்ற நூல் –

அ. நீதிவெண்பா ஆ. புறநானூறு

இ. வெற்றி வேற்கை ஈ. கொன்றை வேந்தன்

13. பாடலின் சீர் மோனைச் சொற்கள் –

அ. அருளை, அருத்துவதும் ஆ. அருளை, அறிவை

இ. அகற்றி, அருந்துணையாய் ஈ. அறிவை, அகற்றி

14. அருந்துணையாய் இச்சொல்லைப் பிரித்தால்

அ. அருந்துணை + யாய் ஆ. அருந்து + துணையாய்

இ. அருமை + துணையாய் ஈ. அரு + துணையாய்

15. உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது

அ. அன்பு ஆ. கல்வி

இ. மயக்கம் ஈ. செல்வம்

## பகுதி –II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு–1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4 x 2 = 8**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பங்கினை எழுதுக.

17. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

18. 'கரப்பிடும்பை இல்லார்' – இத்தொடரின் பொருளை வள்ளுவர் வழி நின்று கூறுக.

19. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) செயற்கை நுண்ணறிவுக் கருவியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளர் ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

ஆ) வேர்டுஸ்மித் என்ற எழுத்தாளி, தகவல்களைக் கொண்டு சில நொடிகளில் அழகான கட்டுரையை உருவாக்கிவிடும்.

20. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

21. 'விடல்' – என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு–2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5 x 2 = 10**

22. கலைச்சொல் தருக.

அ) Aesthetics ஆ) Myth



**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**

பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

| கவிழும், அவிழும், தயங்கும், தங்கும் |
| --- |

காலை ஒளியினில் மலரிதழ் ....................

சோலைப் பூவினில் வண்டினம் ....................

மலைமுகட்டில் மேகம் ....................

அதைப் பார்க்கும் மனங்கள் செல்வத் ....................

23. தண்ணீர்க்குடம், தமிழ்க்கூடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதி, தொடர்களில் அமைக்க.

24. கம்பனும் கண்டேத்தும் உவமைப் புலவனை எந்தக்
கொம்பனும் பணியும் அறமுறுந் ஔவையை அருங்கவியை
காசிப் புலவனை, குணங்குடியாரை சேகனாப் புலவரை
செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ.

பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப்புலவர்களில் ஏதேனும் நான்கு புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

25. பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்டப் போரிடும் திணை குறித்து எழுதுக.

26. 'உரைத்த' – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27. கல், ஆடு, கீரை, மக்கள் – இச்சொற்களின் கூட்டப் பெயர்களை எழுதுக.

28. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

அ) கண்ணும் கருத்தும் ஆ) வயிறு திரித்தல்

## பகுதி –III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு–1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**

29. ஜெயகாந்தனின் 'தர்க்கத்திற்கு அப்பால்' சிறுகதையின் கதை மாந்தர் ஒருவரின் சிறப்புக் கூறு ஒன்றினைக் குறிப்பிட்டு எழுதுக.

30. 'பொய்க்கால் குதிரையாட்டம்' என்னும் நிகழ்கலை குறித்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் முதலில் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.

காலமாற்றத்தால் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

ஆ. பெய்த மழை – இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

இ. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

## பிரிவு–2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

33. 'கவிஞன் யானோர் காலக் கணிதம்' – எனத்தொடங்கும் கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் உங்களைக் கவர்ந்த மூன்று தொடர்களை எழுதி காரணத்தைக் குறிப்பிடுக.

34. அடிபிறழாமல் எழுதுக –

அ) 'அன்னை மொழியே' எனத் தொடங்கி 'பேரரசே' என முடியும் 'அன்னை மொழியே' பாடல்.

(அல்லது)

ஆ. 'செம்பொ னடிச்சிறு கிங்கிணியோடு' எனத்தொடங்கி 'சுட்டி பதித்தாட' என முடியும் 'முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்' பாடல்.

## பிரிவு–3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

35. "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்" – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

36. நிரல் நிறை அணியை விளக்குக.

37. கொண்டுகூட்டுப் பொருள்கோளினை விளக்கி, எடுத்துக்காட்டு ஒன்று தருக.

## பகுதி –IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5 x 5 = 25

38. அ) முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலையும் நிகழ்கால வாழ்க்கைச் சூழலையும் ஒப்பிட்டு எழுதுக.

(அல்லது)

ஆ) இரண்டாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்திப் பாடலின் அழகிய நயத்தைச் சுவைபட விளக்குக.

39. அ) 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில், முதல் பரிசுபெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.



(அல்லது)

ஆ) "பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி, அதனைச் செயல்படுத்தத் தலைமை ஆசிரியரின் ஒப்புதல் வேண்டி, தலைமை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் விளக்கி எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினைப் பூர்த்தி செய்க.

**நூலக உறுப்பினர் படிவம்**

**.................... மாவட்ட நூலக ஆணைக்குழு**

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ..............................

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் : உறுப்பினர் எண் :

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த நாள் :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி / அலைபேசி எண் :
7. முகவரி :

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் .............................. நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. .............................. சந்தா தொகை ரூ. .............................. ஆக மொத்தம் ரூ. .............................. செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் :

தங்கள் உண்மையுள்ள,

திரு / திருமதி / செல்வி / செல்வன் .......................... அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணையாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை

(பதவி மற்றும் அலுவலகம்)

மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர்/மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஊராட்சி / பேரூராட்சி உறுப்பினர்கள்

42. அ) பள்ளியில் நான், வீட்டில் நான் – என்னும் தலைப்புகளில் நீங்கள், பள்ளியிலும் வீட்டிலும் நடந்துகொள்ளும் முறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.

**(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்க.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight. Seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**<u>குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.</u>**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம் தானே எண்ணெயாக இருக்க முடியும்? பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் சான்றோர்க்குக் கடன் என்கிறார் நல்லந்துவனார். அவ்வாறே, உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார்.

i) அன்பு என்னும் சுடருக்கு எண்ணெய்யாக இருப்பது எது?

ii) சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எதைக் காட்டுகின்றன?

iii) உண்மையான செல்வம் என்று நல்வேட்டனார் குறிப்பிடுவது எதனை?

iv) உதவி செய்தலை 'உதவியாண்மை' என்று குறிப்பிடுபவர் யார்?

v) சான்றோர்க் கடனாக நல்லந்துவனார் குறிப்பிடுவது யாது?



## பகுதி –V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** **3 x 8 = 24**

43. அ) தமிழின் இலக்கியவளம் – கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை.

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு 'நடுப்பக்கக் கட்டுரை' ஒன்றிற்கான செய்திகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்களைக் கவர்ந்த எவரேனும் ஓர் அறிஞர் அல்லது அரசியல் தலைவர், தம் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைத் தாமே சொல்வதைப்போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும். எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள்' என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்ப தன்னலமற்ற பண்புகளைக் கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும் என்பதனை நீங்கள் அறிந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.

**<u>குறிப்புகள் :</u>** முன்னுரை – தமிழன் அறிவியலின் முன்னோடி – விண்வெளியும் கல்பனாச் சாவ்லாவும் – விண்ணியல் அறிவில் நமது கடமை – முடிவுரை.

**(அல்லது)**

ஆ) முன்னுரை – உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் – உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் – சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் – முடிவுரை.

இக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதி, பொருத்தமான தலைப்பிடுக.